**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2009–2010 – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – சென்னை குறளகத்தில் இயங்கிவரும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)–1 அலுவலகத்தை திருப்பெரும்புதூரில் உள்ள கோவர்த்தன நகருக்கு மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜி2) துறை**

அரசாணை (டி) எண் : 360 நாள் : 18.06.2010

படிக்க

தொழிலாளர் ஆணையர், சென்னை –5 அவர்களின் கடித எண். இ3/39603/2009, நாள். 30.07.2009, 06.10.2009 மற்றும் 18.11.2009.

———————

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 09.07.2009 அன்று நடைபெற்ற தொழிலாளர் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்.

**அறிவிப்பு எண். 9**

"தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு தமிழக அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளின் பலனாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,812 தொழிற்சாலைகளும் திருப்பெரும்புதூர் வட்டத்தில் 472 தொழிற்சாலைகளும், குறிப்பாக பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இங்குள்ள தொழிலாளர்கள் சமரச அலுவலரை எளிதாக அணுகுவதற்காக தற்போது சென்னை குறளகத்தில் இயங்கிவரும் சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)–1 அலுவலகம் திருப்பெரும்புதூருக்கு மாற்றப்படும்."

2. தொழிலாளர் ஆணையர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சென்னையை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மாவட்டம் தொழிற்சாலைகள் பெருகி வரும் மாவட்டம் ஆகும் எனவும், இம்மாவட்டம் சம்பந்தப்பட்ட தொழிற்தாவாக்களை கவனிப்பதெற்கென்றே சென்னை, குறளகத்தில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)–1 அலுவலகம் இயங்கி வருகிறது என்றும், கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் தொழிற் வளர்ச்சிக்கு அரசு எடுத்து வரும் முயற்சி காரணமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர், ஒரகடம் போன்ற பகுதிகளில் பல மிகப் பெரிய தொழிற்சாலைகள் இயங்கத் துவங்கியுள்ளன என்றும், முக்கியமாக திருப்பெரும்புதூர் அருகிலுள்ள இருங்காட்டுக் கோட்டையில் ஹூண்டாய் கார் தயாரிக்கும் நிறுவனமும் அதன் உப தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன என்றும், கடந்த இரண்டு ஆண்டுகளில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள இருங்காட்டுகோட்டை, ஒரகடம் போன்ற பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் வந்துள்ளன என்றும், இந்த நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பல இடங்களிலிருந்து வந்து பணிபுரிகிறார்கள் என்றும் தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், அவர் இப்பகுதிகளில் அவ்வப்போது தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சனைகளும் உருவாகின்றன

த.பி.பா.,

என்றும், இப்பகுதிக்கான சமரச அலுவலரான தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1, சென்னை குறளகத்தில் உள்ளதால், இப்பகுதியில் ஏற்படும் தொழில் அமைதி பாதிப்பை உடனடியாக அறிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும், மேலும், சமரச அலுவலரை, நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் எளிதாக அணுகிட இயலாத நிலையும் உள்ளதால், சென்னை குறளகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை திருப்பெரும்புதூருக்கு இடமாற்றம் செய்யலாமெனவும், இதன் மூலம் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்கள் சமரச அலுவலரை அணுகுவது மிக எளிதாக இருக்கும் எனவும் சமரச அலுவலரும், பிரச்சனைகளை உடனுக்குடன் அறிந்து தேவையான சமரச நடவடிக்கை மேற்கொண்டு தொழில் அமைதி காக்கலாம் எனவும் தெரிவித்து, இதன் மூலம் சட்ட ஒழுங்கு பிரச்சனையை தவிர்க்கலாம் எனவும், மேற்கூறிய காரணங்களால் சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை குறளகத்திலிருந்து, திருப்பெரும்புதூருக்கு மாற்றிடவும், எந்த தேதி முதல் செயல்படலாம் என்பது குறித்தும் அரசு ஆணைகள் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தொழிலாளர் ஆணையர் மேலும் தனது கடிதத்தில், சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை திருப்பெரும்புதூருக்கு மாற்றுவதற்கு போக்குவரத்து செலவினமாக ரூ.5,000/ தேவைப்படும் என்றும், மாதாந்திர கட்டிட வாடகை ரூ.10,000/- தொடரும் செலவினமாக ஆகுமென்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர், மேற்படி அலுவலகத்திற்கு அரசு ஆணை எண்.884, பொதுப்பணித்துறை, நாள் 12.05.2007ன்படி அவ்வலுவலகத்தின் அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு எண்ணிக்கைக்கு ஏற்ப மொத்தம் தேவைப்படும் இடம் 408-492 சதுர அடி என்று தெரிவித்துள்ளார். மேலும், தொழிலாளர் ஆணையர் 18.11.2009 நாளிட்ட தனது கடிதத்தில், சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை 76, கோவர்த்தன நகர், (பிரம்ம குமாரிகள் தியான நிலையம் அருகில்) சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை திருப்பெரும்புதூர்- 602 105 என்ற இடத்திற்கு இடம் மாற்றம் செய்ய அனுமதி வழங்குமாறு தொழிலாளர் துணை ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், உரிமையாளர் திரு. என்.ஜே. அருள்மணி என்பவருக்கு சொந்தமான 700 சதுர அடி கொண்ட குடியிருப்பு வீட்டை மாதம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அல்லது பொதுப்பணித்துறை நிர்ணயிக்கும் வாடகையில் எது குறைவோ அதை பெற்றுக் கொள்ள சம்மத கடிதம் அளித்துள்ளதாகவும் தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக இடத்திற்கு முதல் தளம் 108.58 எம்$^2$ கட்டிட உள்பரப்பளவு 77.6 எம்$^2$ ஆகிய பரப்பளவிற்கு 01.12.2009 முதல் வாடகை ரூ. 6570/- என நிர்ணயம் செய்யப்பட்ட பொதுப்பணி துறை செயற்பொறியாளரிடம் பெறப்பட்ட வாடகை நிர்ணய சான்றிதழையும், கட்டிட பரப்பளவு சான்றிதழையும் பெற்றுள்ளார்.

மேலும், இது தொடர்பாக சென்னை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை திருப்பெரும்புதூருக்கு மாற்றம் செய்ய அரசு ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழிலாளர் ஆணையர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆராய்ந்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2009-2010-க்கான அறிவிப்புகளில் அறிவிப்பு எண். 9-ன் படி சென்னை குறளகத்தில் இயங்கிவரும் சென்னை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை திருப்பெரும்புதூரில் எண். 76, கோவர்த்தன நகரில் தனியார் கட்டிடத்தில் செயல்படும் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக இடத்திற்கு முதல் தளம் 108.58 எம்$^2$ கட்டிட உள்பரப்பளவு 77.6 எம்$^2$ ஆகிய பரப்பளவு கொண்ட இடத்திற்கு 01.12.2009 முதல்

த.பி.பா.,

மாதவாடகை ரூ.6570/–(ரூபாய் ஆறாயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்) நிர்ணயம் செய்து 01.12.2009 முதல் திருப்பெரும்புதூருக்கு மாற்றம் செய்வதற்கு அரசு ஆணையிடுகிறது. மேலும், சென்னை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்–1) அலுவலகத்தை திருப்பெரும்புதூருக்கு மாற்றுவதற்கு போக்குவரத்துச் செலவினத்திற்கு ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள வாடகை மற்றும் போக்குவரத்துச் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

2230.தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு –01. தொழிலாளர் –101. தொழில் உறவுகள்– I.திட்டத்தில் சேராதது–AA.இணக்க பணியாளரமைப்பு
(i) 05. அலுவலச் செலவுகள் 02. ஏனையச் சில்லைரச் செலவுகள்
(த.தொ.கு. 2230–01–101– AA-0521)
(ii) 06.வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01.வாடகை
(த.தொ.கு. 2230–01–101– AA-0610)

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 32953/L&E/2010, நாள். 17.06.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. பிரபாகர ராவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை –6
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை 18 / 18 (பெயரில்)
மாவட்ட கருவூலம், காஞ்சீபுரம்
சார்நிலை கருவூலம், திருப்பெரும்புதூர், காஞ்சீபுரம் மாவட்டம்

நகல்

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை –09.
நிதி (தொ.ம வே.வா) துறை, சென்னை 09.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–09.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்